ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: 12 | විෂයය / பாடம்: சைவநெறி

# I පත්‍රය - පිළිතුරු
# I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 3 | 31. | 4 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 1 | 32. | 1 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 2 | 33. | 2 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 1 | 35. | 2 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 2 | 37. | 4 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 4 | 19. | 1 | 29. | 1 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 3 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

***From Siyamaladevi***

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන කීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

# சைவநெறி – II

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

i. 'பிள்ளையார் கதை' என்னும் விரத நூலினை இயற்றியவர் யார்?
வரத பண்டிதர்.

ii. ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமையில் அனுட்டிக்கப்படும் விரதம் எது?
வரலட்சுமி விரதம்.

iii. "தடுத்தாட்கொண்ட புராணம்" அமைந்துள்ள நூல் எது?
பெரிய புராணம். திருத்தொண்டர் புராணம், மாக்கதை புராணம், திருப்புராணம்

iv. சிவாகமங்களை அருளிச் செய்தவர் யார்?
சிவபெருமான். இறைவன்

v. கங்காதர புட்கரணியைத் தீர்த்தமாகக் கொண்டு அமைந்துள்ள திருத்தலம் எது?
நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்.

vi. "தேர்த்திருவிழா" உணர்த்தும் இறைவனின் தொழில் எது?
அழித்தல்.

vii. உமாபதி சிவாச்சாரியார் செய்த அற்புதங்கள் இரண்டினை எழுதுக.

1. தீண்ட இருந்த பாம்பைத் தீண்டி இறக்கச் செய்தமை.
2. முனிவரின் சாபம் நீங்க அருளியமை
3. மந்திரவாதியின் ஆற்றலை முறியடித்தமை
4. அரசகுமாரனின் அலித் தன்மையை நீக்கியமை
5. தில்லையில் ஏறாத கொடியை ஏற்றுவித்தமை
6. அரங்கேறாது இருந்த கோயிற் புராணத்தை அரங்கேற்றச் செய்தமை
7. பெற்றான் சாம்பனுக்கு முத்தியளித்தமை
8. முள்ளிச் செடிக்கு முத்தியளித்தமை

2-2
1-1

( இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக )

viii. சைவசமயிகள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- தீபாவளி
- தைப்பொங்கல்
- புதுவருடப்பிறப்பு
- ஓணம் பண்டிகை
- ஆடிப்பிறப்பு
- காமன் பண்டிகை

(இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)

*By Thuvarakan H+*

ix. **சைவசமயி ஒருவர் பெறவேண்டிய தீட்சைகளுள் இரண்டினைத தருக.**

சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை

– கிரியா குரு தீட்சை அளிக்கும் போது ஏழு வகையில் ஏதாவதொரு வகையில் சீடனின் பக்குவ நிலைக்கேற்ப வழங்குவார்.

(நயன தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானச தீட்சை, யோக தீட்சை, சாஸ்திர தீட்சை, ஔத்திரி தீட்சை)

**( இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக )**

x. **பஞ்சபுராணம் ஓதும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

1. இறை பக்தியோடு எழுந்து நின்று கை கூப்புதல் வேண்டும்.
2. ஓதும் முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுதல் வேண்டும்.
3. அடிமுறை பிழையாது ஓதுதல் வேண்டும்.
4. பண்ணோடும் பக்தியோடும் ஓதுதல் வேண்டும்.
5. பொருளை உணர்ந்து ஓதுதல் வேண்டும்.
6. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்ற ஒழுங்கு முறையில் ஓதுதல் வேண்டும்.
7. சைவ ஆசாரசீலராக இருத்தல் வேண்டும்

4-2
3-1
2-1
1-0

**(இரண்டு எழுதியிருப்பின் ஒரு புள்ளி, நான்கு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

**( 10 X 2 = 20 புள்ளிகள் )**

2. i. **மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.**

ii. **அவற்றின் பொழிப்புரையை எழுதுக.**

அ.

திருச்சிற்றம்பலம்
மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிக வாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே
திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

திருவாரூர் இறைவா, நீங்காத அடிமைத் தொண்டு செய்து என்றும் உமக்கே ஆட்பட்டு நிற்கும் அடியார்கள் பிறரிடம் எதையும் வேண்டமாட்டார்கள். துன்பம் நேரும் பொழுது மூண்டு எரியாது உள்ளே வெந்து கொண்டிருக்கின்ற நெருப்பைப் போல மனதால் வருந்தி முகம் வாடி நிற்பார்கள். அவர்கள் தம் துன்பத்தை உம்மிடம் வாய் திறந்து சொல்லும் பொழுது நீர் பேசாதிருக்கின்றீர். இது உமது தன்மையாகில் நீர் இனிது வாழ்வீராக!

(ஆ) திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

ஞான நூல்களைக் கற்று உணர்ந்தவர்கள் உணர்ந்து அனுபவிக்கின்ற கற்பகக் கனியாக இருப்பவர் சிவபெருமான். எல்லையில்லாத அரும் பெருங் கருணைக் கடல் மெஞ்ஞான நூல்கள் கல்லாதவர்களால் அறிந்துகொள்ள முடியாத மாணிக்கமலை. தம்மை மதித்து வழிபடுவோரது மனதிலே தூண்டாமணி விளக்குப்போல பிரகாசிப்பவர். பகை கொண்டு எழுந்து அசுரர்களது முப்புரங்களையும் அழித்தவர். திருவீழிமிழலை என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற வெற்றியாளர். அவரைக் கண்டு என்மனம் ஆனந்தத்தில் குளிரக் கண்கள் குளிர்ந்தன.

இ. திருச்சிற்றம்பலம்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

நடராஜப் பெருமானுடைய சிறப்புக்களைக் கூறி அவர் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துக் கூறுவதாக அமைந்திருக்கின்றது. இப் பாடல் வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவரின் குழந்தையாகிய உபமன்யு பசியினாற் பாலை விரும்பி அழுதலும், அவருக்கு பாற்கடலையே அழைத்து உண்ணக் கொடுத்தருளிய பிரானும் விஷ்ணுவுக்கு சக்கரப்படையை கொடுத்தருளிய இறைவனும், வேதங்களை இடைவிடாமல் ஓதி ஒலிக்கும் அந்தணர்கள் வாழ்கின்றதும், என்றும் நிலை பெற்று இருப்பதுமாகிய சிதம்பரத்தின் கண்ணேயுள்ள சிற்றம்பலம் என்னும் பொருட்சபையைத் தமக்கு இடமாகக் கொண்டு (அன்பர்களுக்கு) அருள்புரிந்து ஆனந்தத் தாண்டவம் புரிய வல்லவனும் ஆகிய சிவபொருமானைப் புகழ்ந்து "பல்லாண்டு வாழ்க" எனக் கூறி நாம் வாழ்த்துவோமாக.

திருச்சிற்றம்பலம்

ஈ. மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
தேவருந் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

ஆறு முகங்களும் அம் முகங்களினின்று வெளிப்படும் அருட்கருணையும் முப்பத்து முக்கோடி தேவரும் கைதொழுது நிற்க, பன்னிரண்டு கரங்களுடன் வெளிப்பட்டவரும் காஞ்சி மாமரமாக உருவெடுத்த சூரபத்மனை சக்தி வேலினால் இரு கூறாக்கி, அவன் ஆணவத்தை ஒடுக்கி, சேவற் கொடியாகவும், மயில் வாகனமாகவும் கொண்ட ஞான சக்தியாகிய வேலினைத் திருக்கரத்தில் தாங்கியவனுமாகிய சிவகுமாரனே உனைப் போற்றி வழிபடுகின்றோம்.

உ. பச்சை மாமலை போல்மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்றும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மாநகருளானே

**பொழிப்புரை:**

திருவரங்கத்தில் உள்ளவாறு மிகப்பெரிய மரகத மலை போன்ற திருமேனியை உடையவரே, பவளம் போன்ற சிவந்த வாயை உடையவரே, தாமரை மலர்க் கண்களைக் கொண்ட கண்ணனே, அச்சுதனே, தேவனே, ஆயர் குலத்தின் கொழுந்து என்று அழைக்கப்படும் கண்ணபிரானே, உமது திரு நாமங்களைச் சொல்வதால் பெறத்தக்க இன்பத்தை மட்டுமே வேண்டுகின்றேன். ஏனெனில் தேவேந்திரப் பதவியில் கிடைக்கும் இன்பத்தை விடவும் இதுவே மேலான இன்பமாகும்.

**பாடல் : 3 + 3 = 6 புள்ளிகள்**
**பொழிப்பரை : 2 + 2 = 4 புள்ளிகள்**
**( மொத்தம் 10 புள்ளிகள்)**

3. சைவசமய நூல்கள் உயர்ந்த விழுமியங்களை வலியுறுத்துகின்றன.

i. **வாய்மையே வெல்லும் என்ற இலட்சிய வாழ்விற்கு முன்னுதாரணமாக விளங்கிய இருவரைக் குறிப்பிடுக.** **( 02 புள்ளிகள் )**
அரிசந்திரன், மகாத்மா காந்தி

ii. **ஈகையை வெளிப்படுத்தக்கூடிய செயல்கள் மூன்றினைத் தருக.**

1. நாள் தோறும் உங்களால் இயன்ற அளவு பிறருக்குக் கொடுத்து உண்ணுதல்.
2. ஆதரவற்றோர்க்கு உதவுதல்.
3. நமக்குத் தெரிந்தவற்றை மற்றவர்க்கு சொல்லிக்கொடுத்தல், பயிற்றுவித்தல்
4. எமது நேரத்தையும், உழைப்பையும் பிறருக்கு கொடுத்தல்
5. எதைக் கொண்டு வந்தோம் எதைக் கொண்டு போகப் போகப்போகின்றோம் என்று வாழ்க்கையின் நிலையாமையைச் சிந்தித்து வறியவர்க்கு உதவுதல்.
6. உதவி தேவைப்படும் வழிப்போக்கர்களையும் முன்பின் தெரியாதவர்களையும் பேணுதல்

3 - 3
2 - 2
1 - 1
(03 புள்ளிகள்

iii. **"அன்பு நெறியே சைவநெறி" என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

- "அன்பின் வழியது உயிர் நிலை..." என்பது வள்ளுவர் வாக்கு ஆகவே மனிதர் மட்டுமன்றி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
- கடவுள் வழிபாடு அன்பினை அடிப்டையாகக் கொண்டது. அன்பு தான் சிவம், "அன்பே சிவம்" – திருமூலர்.
- அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை, அன்பு வாழ்வு தான் சைவசமய வாழ்வு. அன்புநெறியே சைவநெறி.
- உலகிலுள்ள அனைத்திலும் கடவுள் நிறைந்திருப்பதனால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் அவசியமாகும். ஏழைகள் உள்ளத்தில் கடவுளைக் காணலாம். ஆகவே "மக்கள் சேவையே மகேசன் சேவை" ஆகும்.
- எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கியும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" எனத் தாயுமானவரும் அன்பிலாத வாழ்வை "என்பு தோல் போர்த்த உடம்பு" என்று திருவள்ளுவரும் குறிப்பிடுகின்றார். சிவபெருமானைக் கருணாமூர்த்தி, ஜீவ காருண்யன், தயாபரன் என்று திருமுறைகள் போற்றும். "அன்பினால் விளைந்த ஆரமுதே" என்று மாணிக்கவாசகரும் "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி" என திருமூலர் குறிப்பிடுவது அன்பினால் விளைந்த ஜீவகாருண்யத்தைக் காட்டுவதாக உள்ளது.

5-5
4-4
3-3
2-2
1-1

**( 05 புள்ளிகள் )**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

4. **"பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்ட பின்னர் பாடப்பட்ட பாடல்கள் பிற்காலத் தோத்திரப் பாடல்களாகும்."**

(i) **பிற்காலத் தோத்திரப் பாடல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

திருப்புகழ். அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, பராபரக்கண்ணி, கந்தரந்தாதி, கந்தரனுபூதி, திருவெழுக்கூற்றிருக்கை, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம், நாலாயிரத்திவ்யபிரபந்தம், கந்தபுராணம். கந்தரலங்காரம், திருவாரூர் நான்மணிமாலை சிதம்பர மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், நீதிநெறி விளக்கம் மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ்

**( 02 புள்ளிகள் )**

(ii) **நாலாயிரத் திவ்ய பிரபந்தம் பற்றிய மூன்று குறிப்புகள் எழுதுக.**

வைணவ மதத்தின் முழுமுதற் கடவுளாகிய திருமாலின் பெருமை, புகழ்பாடுவதாக அமைந்துள்ளது. பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்ட பிரபந்தங்களை ஶ்ரீமத் நாதமுனி என்பவர் நாலாயிரத் திவ்யபிரபந்தமாகத் தொகுத்தார். 4000 என்பது பாசுர எண்ணிக்கையைக் குறிக்கும். திவ்யம் என்பது அடியார்களுக்கு இன்பம் அளிப்பதைக் குறிக்கும். பிரபந்தம் என்பது தொகுப்பு அல்லது தனிநூல் எனப் பொருள் தரும். ஆதலால் தெய்வத்தின் திவ்ய குணங்களைப் போற்றும் பிரபந்தங்களின் தொகுப்பு எனப்படும். இந்நூலைத் திராவிட வேதம் என்பர்.

**( 03 புள்ளிகள் )**

(iii) **அபிராமி அந்தாதி பாடப்பட்ட சந்தர்ப்பம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

அபிராமிப்பட்டர் நிஷ்டையில் அமர்ந்திருந்த போது சரபோஜி மன்னருக்கு அமாவாசைத்திதியை பௌர்ணமித்திதி எனக் கூறிவிடுகின்றார். கோபமடைந்த மன்னர் அதனை நிரூபிக்குமாறு அபிராமிப்பட்டருக்குக் கட்டளையிட்டார். இந் நிலையில் அபிராமிப்பட்டர் ஆலய வாயிலில் 101 இழைகளைக் கொண்ட உறியினைக் கட்டி அவ்வுறியில் ஏறி அமர்ந்து உறியின் கீழ் தீ மூட்டி ஒரு பாடலுக்கு ஒரு இழையாக என் அறுத்து நூறு பாடல்களைப் பாடினார். இதுவே அபிராமி அந்தாதி ஆகும்.

அறுத்து பாடுகின்றார், 80 வது பாடலில் அன்னை தோன்றினார். இவ்வாறு **( 05 புள்ளிகள் )**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

5. பதி, பசு, பாசம் முப்பொருளாகும்

-'சைவ சித்தாந்தம்

i. **சைவ சித்தாந்தம் குறிப்பிடும் பதியின் இரண்டு நிலைகளையும் தருக.**

தடத்த நிலை , தடத்தலக்கணம், குணங்குறிகளுடன் கூடிய நிலை

சொரூப நிலை சொரூபலக்கணம், குணங்குறிகள் அற்ற நிலை **( 02 புள்ளிகள் )**

ii. **பசுவின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.**

- ஆன்மாக்கள் அநாதியானவை, எண்ணிறைந்தவை , நித்தியமானது, அறிவற்றது
- பந்திக்கப்பட்டவை. இதனால் பசு என்ற பெயரைப் பெறுகின்றது.
- பாசங்களோடு இவை தொடர்பு பட்டிருக்கும் தன்மையால் சகலர், பிரளயாகலர், விஞ்ஞான கலர் என மூவகைப்படுகின்றது.
- ஆணவத்தோடு அநாதியாகவே கட்டுண்டு வருந்துகின்றன.
- ஆணவத்தின் வலிமையைக் கெடுத்தற்காக இறைவன் ஆன்மாக்களுக்கு மாயையினாலாகிய தனு, கரண, புவன, போகங்களைக் கொடுக்க அவற்றிடையே இவை வினை செய்யும். வினை செய்தாலும் திருவருட் சக்தி பதிதலினாலும் ஆணவம் வலியிழந்து ஆன்மாக்கள் இறைவனைச் சேர்ந்து பேறாற்றல் பெறும்.
- ஆன்மா பதியைச் சாரும் போது சத்தாயும் பாசங்களைச் சாரும் போது அசத்தாயும் இருப்பதனால் "சதசத்து" எனப்படுகின்றது. **( 03 புள்ளிகள் )**

* அறிவிக்கால் அறியும் ஆற்றல் உடையது, சிற்றறிவு உடையது.

iii. **மும் மலங்களுள் ஆணவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

**ஆணவம்**

இது ஆன்மாவை அணுத்தன்மைப்படுத்துவதால் "ஆணவம்" என்றும், ஆன்மாவின் அறிவை மயக்கி இருட்படலம் போல் மறைத்து நிற்பதால் இருள்மலம் என்றும் அழைக்கப்படுகின்றது. மூவகை ஆன்மாக்களிலும் என்றும் பிரியாமல் கூடி சகசமாய் கலந்திருப்பதனால் சகசமலம் என்றும் மும்மலங்களுக்கு மூலமாய் இருப்பதனால் மூலமலம் என்றும் பெயர் பெறும். மோகம், மதம், ராகம், விசாதம், சோஷம், வைசித்திரியம், அரிசம் முதலியன இதன் குணங்களாகும். ஆணவம் பொருட்களை மறைக்கின்ற அதே வேளை தன்னையும் மறைக்கின்றது. "ஒரு பொருளுங் காட்டா திருளுருவம் காட்டும் இரு பொருளுங் காட்டா திது" - உமாபதி சிவாச்சாரியார்.

முத்தி நிலையிலும் ஆணவம் அழியாது **( 05 புள்ளிகள் )**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

6. **சைவ மரபுகளைப் பேணுவதில் சைவாலயங்களின் பங்கும் பணியும் மகத்தானவை'**

i. **இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற இரண்டு சிவாலங்களையும் குறிப்பிடுக.**

திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம்

**( 02 புள்ளிகள் )**

ii. **மட்டக்களப்பு புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெறும் தீ மிதிப்புச் சடங்கின் சிறப்பம்சங்கள் யாவை?**

- ஆண்டுக்கொருமுறை இடம்பெறும் தீ மிதிப்புச் சடங்குக் காலங்களில் மாத்திரம் மூலஸ்தானக் கதவு திறந்திருக்கும்.
- இவ்வாலயத்தில் மகோற்சவம் இடம்பெறுவதில்லை. தீ மிதிப்புச் சடங்கே பிரதான உற்சவமாகக் காணப்படுகின்றது.
- இவ்வுற்சவம் ஆனி மாதத்தில் ஆறு நாட்கள் இடம் பெறும்.
- முதலாம் நாள் சடங்கு ஞாயிற்றுக்கிழமை திருக்கதவு திறத்தல், அம்மனை எடுத்து வருதல், என்பவற்றுடன் ஆரம்பமாகும்.
- தொடர்ந்து மூன்றாம் நாள் சடங்கில் கன்னிப்பிள்ளை பிடித்தல் மற்றும் கலியாணக்கால் வெட்டுதல் ஆகிய சடங்குகள் இடம்பெறும்.

- நான்காம் நாள் எரிக்கிளை வெட்டுதல், நெல்லுக் குற்றுதல் ஆகிய சடங்குகள் இடம்பெறும்.
- ஆறாம் நாள் வெள்ளிக்கிழமை தீ மிதித்தல் சடங்கு அருளும் பக்தியும் நிறைந்தது.
- சிறுவர் முதல் பெரியவர் வரை பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் உணர்வுபூர்வமாகப் பங்கு கொள்கின்றனர்.
- புலம்பெயர்ந்து வாழும் அடியவர்களும் கலந்து சிறப்பிப்பார்.
- அம்மனின் அருள் பெற்று தெய்வம் ஆடும் தெய்வக்காரர்களால் திருவாக்குச் சொல்லுதல், பில்லி, சூனியம் முதலான தீய காரியங்களுக்குரிய பரிகாரம் செய்தல் என்பன இடம்பெறும்.

**( 3 புள்ளிகள் )**

iii. **நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றினை சுருக்கமாக விளக்குக.**

- நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தொன்மையை கைலாயமாலை, யாழ்ப்பான வைபவமாலை போர்த்துக்கேய வரலாற்றாசிரியராகிய குவெறோஸ் அவர்களது குறிப்புக்கள், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால பதிவேடுகள் மூலம் அறிய முடிகிறது.
- 13 ஆம் நூற்றாண்டில் முதலாவது ஆரியச்சக்கரவர்த்தியான கூழங்கை சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது.
- புவனேகபாகு எனும் ஆரியசக்கரவர்த்திகளின் முதலமைச்சனால் 1248 இல் கட்டப்பட்டதாக கைலாயமாலை குறிப்பிடுகின்றது.
- 1450 ஆம் ஆண்டளவில் கோட்டையரசனின் வளர்ப்பு மகனாகிய செண்பகப் பெருமாள் என்னும் புவனேகுபாகுவினால் அழிக்கப்பட்டு மீண்டும் அவனாலேயே முத்திரைச் சந்திப் பகுதியில் கட்டப்பட்டது. அவனது பெயர் ஆலயக் கட்டிடத்திலும் உள்ளது.
- போர்த்துக்கேயர் காலத்தில் "பிலிப்தெ ஒலிவெறா" என்னும் தளபதியால் 1621 ஆம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம் திகதி முற்றாக அழிக்கப்பட்டது.
- கோயிற் குருக்கள் ஆலய விக்கிரகங்கள் சிலவற்றை பூதராயர் கோயிலுக்கு அண்மையில் உள்ள குளத்தில் புதைத்துப் பாதுகாத்தார்.
- வரலாற்றாசிரியரான "குவெறோஸ்" "யாழ்ப்பாணத்தில் பெரிய கோயிலாகவும் நெடுமதில்களை உடையதாகவும் நல்லூர் காணப்பட்டது" எனத் தனது குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளார்.
- ஒல்லாந்தர் காலத்தில் 1734 ஆம் ஆண்டு கிருஷ்ணையர் சுப்பையர் என்பவரால் சிறுமடாலயமாகக் கட்டப்பட்டது.
- ஒல்லாந்தர் ஆட்சியில் சிறாப்பராக இருந்த இரகுநாத மாப்பாண முதலியாரால் பெரிய கற்கோயிலாக அமைக்கப்பட்டது. அவர் பரம்பரையில் வந்தோரே இன்று வரை ஆலயத்தை நிர்வகித்து வருகின்றனர்.
- இவ்வாலயச் சூழலிலே ஈழத்துச் சித்தர் பரம்பரையில் வந்த செல்லப்பாச் சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற சித்தர்கள் வந்து தரிசனம் செய்து நடமாடி உள்ளனர்.

கிழக்கோபுரம், தெற்குவாசல் கோபுரம், வடக்குவாசல் கோபுரம் **( 05 புள்ளிகள் )**
ஆலய வரலாறு சிறப்பானதாகவும் ஒழுங்கானதாகவும் கட்ட **2 +3 +5 = 10 புள்ளிகள் )**
அருணகிரிநாதரால் பாடப்பட்டது. மூலஸ்தானத்தில் தங்கவேல் உள்ளது.

7. **மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.**

(i) **வீட்டில் சைவம்**

- மனிதர்களின் வாழ்வில் அனைத்து அம்சங்களும் வீட்டினைத் தொடர்புபடுத்தியே பின்னப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான இடத்தைச் சமயம் வகிக்கின்றது. சைவசமயிகள் அனைவரும் தமது இல்லங்கள் தோறும் சமய சிந்தனையுடனேயே கருமங்கள் ஆற்றுகின்றனர்.
- நாம் காலையில் எழுவதிலிருந்து நித்திரைக்குச் செல்லும் வரை இறை சிந்தனையுடனேயே செயற்படுகின்றோம்.
- காலையில் நித்திரை விட்டெழும்போதே "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டே எழுகின்றோம் இதுவே முதல் இறை வணக்கமாகும்.
- பின்னர் சூரிய நமஸ்காரம் செய்கின்றோம்.

- தொடர்ந்து வீட்டைக் கூட்டிச் சுத்தப்படுத்தி மஞ்சள் நீர், சாணம் என்பவற்றால் வீட்டையும் சூழலையும் சுத்தப்படுத்துகின்றோம்.
- தூய்மையான இடங்களிலே மட்டும் இறைவன் உள்ளான் என்பதை உணர்கின்றோம்
- நீராடிய பின்னர் தெய்வப்படங்களுக்குப் பூவும் நீரும் வைத்து, தூப தீபம் காட்டி, நெற்றியில் விபூதி தரித்து சிவசிவ என்கின்றோம்.
- வீட்டில் இருக்கும் பசு, நாய் போன்ற பிராணிகளுக்கு உணவளித்து ஜீவகாருண்யத்தை வளர்க்கின்றோம்.
- வறியவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் உணவளிக்கின்றோம். இன்முகத்துடன் பிறருடன் இன்சொல் பேசுகின்றோம்.
- வீட்டுச் சூழலில் பூந்தோட்டம், துளசிமாடம் அமைத்துக் கடவுளுக்கு ஏற்ற மலர்களைப் பெற்றுக் கொள்கின்றோம்.
- நாம் உணவு உண்ண முன்பு "அன்னம் பாலிக்கும்..." போன்ற திருப்பாடல்களைப் பாடி, உணவு உண்கின்றோம். இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.
- மாலை வேளையில் இறைவனுக்கு விளக்கேற்றி, திருமுறைப்பாடல்களைப் பாடி இன்று நாம் செய்த பிழைகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றோம்.
- விசேட பண்டிகைகளையும் விழாக்களையும் கொண்டாடுகின்றோம்.
- விரதங்கள் அனுட்டிக்கின்றோம்.
- ஒருவருக்கு ஒருவர் காலை வணக்கம் கூறுகின்றோம்.
- மாலை உணவு உண்கின்றோம்.

**( 05 புள்ளிகள்)**

**(ii) வசந்தன் கூத்து**

- வசந்தன் கூத்து என்னும் சொல் மரபானது வசந்த காலத்தில் ஆடப்படுவது என்ற பொருளையும் இன்பத்தை தருவது என்ற பொருளையும் கொண்டது ஆகும்.
- பிள்ளையார் வசந்தன், அனுமர் வசந்தன். அம்மன்பள்ளு, வசந்தன் ஆட்டம் என வகைப்படுத்துவர்.
- வசந்தன் கூத்து முருகன், காளியம்மன், முத்துமாரியம்மன் போன்ற ஆலயங்களில் ஆடப்படும்.
- இக் கூத்து இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே ஆடப்படுகின்றது.
- ஆலயச் சடங்குகளோடும் சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி முதலிய பண்டிகைகளிலும் இக் கூத்துக் கலை செல்வாக்குப் பெறுகின்றது.
- எட்டுப்பேர் அல்லது பத்துப் பேர் கொண்ட குழுவினரே இக் கூத்தை மேற்கொள்வர்.
- இது பக்தியை ஏற்படுத்துவதாக உள்ளது.
- மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் அதிகம் வசந்தன் கூத்து ஆடப்படுகின்றது.
- இது சமய சமூக முக்கியத்துவம் கொண்ட கலையாகும். இவ்வாறான கலை வழக்கு அழிந்து போகாமல் பாதுகாப்பது எமது அனைவரினதும் கடமையாகும்.

**(05 புள்ளிகள்)**

**(iii) கோயில் வழிபாட்டின் அவசியம்**

- சமூக நன்மையின் பொருட்டும் ஆன்மீகத்தை வளர்க்கும் பொருட்டும் கோயில்கள் தோற்றம் பெற்றன.
- கோயில்கள் என்பது இறைவன் குடியிருக்கும் இடம். எமது பண்பாடுகள் வளர்க்கப்படுகின்ற இடம்.
- இறையன்பை வளர்ப்பதற்கும் எமது அன்றாட கடமைகள் சிறப்பதற்கும் ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கும் கோயில் வழிபாடு உதவுகின்றது. இதனால் தான் எமது முன்னோர்கள் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "ஆலயம் இல்லாத ஊர் அடவிகாடே", ஆகிய முது மொழிகளுடாக, எமது வாழ்விலே திருக்கோயில் வழிபாட்டின் அவசியத்தை உணர்த்துகின்றனர்.
- "நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா" என்ற அப்பரின் பாடல் மூலம் இறைதொண்டின் சிறப்பை அறியலாம்.
- எமது ஆன்மீக வாழ்வில் அதிக அளவிலான ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகள் கோயில்களிலேயே நடைபெறுகின்றன.
- நித்திய பூசை, நைமித்திய பூசை. தலயாத்திரை, தீர்த்தயாத்தரை ஆகிய கருமங்கள் கோயில்களில் முறைப்படி நடைபெறுவதனால் கோயில்கள் ஒரு சமூகமயப்பட்ட நிலையங்களாக மாறிவிடுகின்றன.

- இங்கு நடைபெறுகின்ற பூசைகள், விழாக்கள். கலைகள் என்பன மனதினைப் பண்படுத்துவதினால் படிப்படியாக எம்மை வீடுபேற்றிற்கு இட்டுச் செல்கின்றன.
- பஞ்சமா பாதங்களை விலக்கி வாழ வழிவகுக்கின்றது.

**(05 புள்ளிகள்)**

### (iv) சிவ சின்னங்கள்

- நாம் சைவ சமயத்தவர் என்பதை வெளிப்படுத்தி நிற்பவை சிவசின்னங்களாகும்.
- தமது வாழ்வில் சைவ ஆசாரங்கள், சைவ ஒழுக்கங்கள் என்பவற்றை கடைப்பிடிப்பவரே உண்மைச் சைவராவார்.
- சிவநெறி நிற்கும் சைவர்களுக்கு உரிய சிவ சின்னங்கள் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் என்பனவாகும்.
- இச் சிவசின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பனவாகும்.
- சைவ மக்களால் இவை அணியப்பெற்றும், துதிக்கப்பெற்றும் வருபவை.
- சிவசின்னங்களைக் காணும் போது அவற்றை சிவமாகக் கருதி வழிபட்டு வருதல் வேண்டும்.

1. விபூதி – அழியாத செல்வத்தையும் ஞானத்தையும் கொடுப்பதனால் விபூதி என்றும், தீவினை அனைத்தையும் நீறுபடுத்துவதனால் "திருநீறு" என்றும், தீமைகளில் இருந்து இரட்சிப்பதனால் "இரட்சை" என்றும், ஆன்மாக்களின் மலமாசைப் போக்குவதனால் "பசிதம்" என்றும் பலவாறு அழைக்கப்படும்.
   - வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தேவார திருமுறைகள் சிவனடியார் வரலாறுகள் என்பவற்றால் திருநீறு மகிமைப் படுத்தப்பட்டுள்ளது.
   - கோயில் கிரியைகள், வழிபாடுகள் யாவற்றிலும் திருநீறு முக்கிய இடம் வகிக்கின்றது.
   - சிவப்பிரசாதமாக அடியார்க்கு வழங்கப்படுகிறது. நோயைத் தீர்க்கவும் பிறவிப் பிணியறுக்கவும் பயன்படுகின்றது.
   - திருநீறு, கற்பம், அனுகற்பம், உபகற்பம், அகற்பம் என நால் வகைப்படும்
   - "நீறு இல்லா நெற்றி பாழ்" என்பது முதுமொழி.
   - "திருவெண்ணீறு அணி திருவில்லூரும்" என்ற அப்பர் சுவாமிகளின் பாடலும் சம்பந்தரின் திருநீற்றுப்பதிகமும் திருநீற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

2. உருத்திராக்கம் – உருத்திர + அக்கம் – உருத்திராக்கம் எனப்படும். சிவனின் கண்ணில் இருந்து தோன்றியவையாகும். கோயிலுக்குப் போகும் போதும் விரதம் அனுட்டிக்கும் போதும் சிரார்த்தம் முதலிய அனுட்டான காலத்திலும் புண்ணிய தல யாத்திரை செய்யும் போதும் புண்ணிய தீர்த்த நீராடும் போதும் அணிய வேண்டும். ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையை நினைவூட்டுவதாக அமைகின்றது. 1முகம் 5முகக் காய உள்ளது, காதில் அணிவது, கழுத்தில் அணிவது.

3. பஞ்சாட்சரம் – மந்திரம் என்பது உச்சரிப்பவரை காப்பது. எனவே சைவர்கள் தவறாது உச்சரிக்க வேண்டியது "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகும். "சிவாயநம" என்பதில் சி – சிவத்தினையும், வா – திருவருட்சக்தியினையும், ய- ஆன்மாவையும், ந- திரோதன சக்தியையும், ம – மலங்களையும் குறிப்பனவாகும். "சிவாயநம" என்பது சிகராதி பஞ்சாட்சரம் எனவும் "நமசிவாய" என்பது நகராதி பஞ்சாட்சரம் எனவும் அழைக்கப்படும்.

சிவ சின்னங்கள் அணிவதால் ஏற்படும் நன்மைகள்

1. உடல் நோய் நீங்கும்.
2. பிறவிப் பிணி அகலும்.
3. துன்பங்கள் துயரங்கள் நீங்கும்.
4. மனம், வாக்கு, காயம் என்பன தூய்மையடையும்.
5. அன்பும் ஒழுக்கமும் மேலோங்கும்.
6. இறைபக்தி ஏற்படும் .
7. ஆத்ம பலன் கொடுக்கும்.

**( 5 +5 = 10 புள்ளிகள் )**